Before the Court of Chief Judicial Magistrate cum Special Judge, Kanniyakumari.

# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை 173 BNSS
(Under Section ~~154 Cr.P.C.~~)
(~~குந.வி.தொ.பிரிவு 154~~ இன் கீழ்)

C 8167266

1. District மாவட்டம் : Kanniyakumari PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption, Kanniyakumari. Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 08/2024 Date: நாள் 05.11.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended on 2018 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29-10-2024 Date to : நாள் வரை 04-11-2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 hrs Time to : நேரம் வரை 12.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05-11-2024 Time : நேரம் 08.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 2½ km North East
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — District Forest Office Campus, Vadasery, Nagercoil
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. C. Maharajapillai (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Chokkalingam Pillai
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு aged 47 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Army (MES) (g) Address : முகவரி No 55A, Pillaiyar kovil Street, North Thamaraikulam - 629704 Kanniyakumari District. cell. 7012258997

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Paulraj, Forest Watcher, Nagercoil range office, District Forest office campus, Vadasery, Nagercoil.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரி
திரு. பால்ராஜ்,
Forest Watcher,
Nagercoil range office,
District Forest Office Campus,
வடசேரி,
நாகர்கோவில்

பணிந்து சமர்ப்பிக்கிறேன்! - நான் இன்று (05-11-2024)ம் தேதி காலை 08-00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு. C. மகாராஜாபிள்ளை, வயது 47 S/o. M. சொக்கலிங்கம் பிள்ளை, No. 55A, பிள்ளைமார் கோவில் தெரு, வடக்கு தாமரைகுளம், PIN code - 629704, கன்னியாகுமரி மாவட்டம். என்பவர் என் முன்பு ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகார் மனுவை கொடுத்தார். நான் அந்த புகார் மனுவைப்பெற்று படித்து பார்த்து புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரி மற்றும் புகார்தாரர் ஆகியோரின் முன் நடத்தைகள் குறித்து என்னுடைய ரகசிய தொடர்பாளர் மூலம் விசாரித்து பார்த்தும், புகாரில் தெரிவித்துள்ள சங்கதிகள் குறித்தும் தொடர்பாளர் மூலம் விசாரித்து தெரிந்து, மேற்படி புகார் மீது சட்டப்படியாக நடவடிக்கை எடுக்க உடனடி தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தென்மண்டல காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 05/11/2024 (signature) 05-11-2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05-11-2024 at 09.45 hrs

Name: பெயர் C. SIVA SANKARI
Rank: நிலை ~~Inspector of~~ Police
Vigilance and Anti-Corruption,
Kanniyakumari Detchment.

**Attachment to Column No.12 of First Information Report in Kanyakumari Vigilance and Anti-Corruption, Cr.No.8/2024.**

தகவல் தெரிவித்து வாய்மொழி பெற்று கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கன்னியாகுமரி பிரிவு குற்ற எண்.8/2024, சட்டப்பிரிவு 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 –ன்படி இன்று 05.11.2024-ம்தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்கிறேன். புகார் மனு பின்வருமாறு:- அனுப்புநர் C.மகாராஜபிள்ளை, வயது 47, த/பெ.M.சொக்கலிங்கம்பிள்ளை, No.55-A, பிள்ளையார் கோவில் தெரு, வடக்குதாமரைகுளம், கன்னியாகுமரி மாவட்டம்.Cell:7012258997. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, நாகர்கோவில். ஐயா, நான் கன்னியாகுமரி மாவட்டம், வடக்குதாமரைகுளம், பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகின்றேன். நான் இந்திய ராணுவத்தில் 17 வருடங்கள் பணிபுரிந்து 2011-ல் ஓய்வு பெற்றேன். தற்போது 2013-ம் ஆண்டு இந்திய ராணுவத்தில் பொறியியல் பிரிவில் பணியில் சேர்ந்து திருவனந்தபுரத்தில் உள்ள பாங்கோடு ராணுவமுகாமில் Skilled Electrician ஆக பணிபுரிந்து வருகின்றேன். நான் கடந்த 24.02.2016-ம்தேதி அகஸ்தீஸ்வரம் வட்டம், குலசேகரபுரம் கிராமம், சர்வே எண்.76/6-B-ல் 5 1/2 சென்ட் இடத்தை விலைக்கு வாங்கினேன். இதற்கான பட்டா எண்.5806 ஆகும். மேற்படி இடத்தில் வீடுகட்டுவதற்காக DTCP Approval-க்காக நான் விண்ணப்பித்திருந்தேன். அதில் மேற்படி இடம் மலையிட பகுதியில் வருவதால் தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து தடையில்லா சான்று பெற வேண்டும் என்று கூறியிருந்தபடியால் தடையில்லா சான்று வேண்டி 16.09.2024-ம்தேதி நாகர்கோவில், வடசேரியில் உள்ள மாவட்ட வனத்துறை அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்திருந்தேன். அதன்பின்னர் கடந்த 29.10.2024-ம்தேதி அன்று 8870876078 என்ற செல் நம்பரிலிருந்து என்னுடைய 7012258997 என்ற எண்ணிற்கு காலை சுமார் 11.30 மணியளவில் ஒருவர் என்னை தொடர்பு கொண்டு மேற்படி நான் தடையில்லா சான்று வேண்டி கொடுத்திருந்த விண்ணப்பம் சம்மந்தமாக ரேஞ்சருடன் இடம் பார்வையிட வருவதாக கூறினார். அவரிடம் தாங்கள் யார் என்று கேட்டதற்கு தனது பெயர் பால்ராஜ் என்றும், தான் வாட்ச்சராக வேலை பார்ப்பதாகவும் கூறினார். அன்றையதினம் நான் திருவனந்தபுரத்தில் பணியில் இருந்தபடியால் எனது உறவு முறையில் தம்பி ஒருத்தரை மேற்படி இடத்தை காண்பித்து கொடுக்க நிறுத்தியிருந்தேன். சிறிது நேரம் கழித்து சுமார் 12.00 மணியளவில் எனது செல் நம்பரிலிருந்து மேற்படி 8870876078 என்ற செல் நம்பரில் தொடர்பு கொண்டு எப்போது வருவீர்கள் என்று கேட்டதற்கு சிறிது நேரத்தில் இடத்தை ஆய்வு செய்ய வந்துவிடுவதாகவும் இடஆய்வு முடிந்த பின்பு தடையில்லா சான்று கிடைக்க ஏறிபாடு செய்து தருவதாகவும் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) கொடுத்தால் மட்டுமே அதற்கான ஏற்பாடு செய்வேன் என்று கூறினார்.

மேலும் அன்றைய தினம் என்னிடம் செல் நம்பரில் தீபாவளி முடித்து திங்கள்கிழமை தன்னை நாகர்கோவில் மாவட்ட வனத்துறை அலுலவகத்தில் வந்து சந்திக்கும்படியும் கூறி எனது இடத்தை ரேஞ்சருடன் சேர்ந்து பார்வையிட்டு சென்றுவிட்டார். எனவே நான் எனது அலுவலகத்தில் லீவு போட்டு நேற்று 04.11.2024-ம்தேதி சுமார் 12.00 மணியளவில் நாகர்கோவில் வடசேரியிலுள்ள மாவட்ட வனஅலுவலகம் சென்று அங்கிருந்த திரு.பால்ராஜ் வாட்ச்சர் என்பரை நேரில் சந்தித்து மேற்படி தடையில்லா சான்று பற்றி கேட்டதற்கு ஏற்கனவே தான் கேட்ட பணம் கொடுத்தால் மட்டுமே தடையில்லா சான்றுக்கு ஏற்பாடு செய்வேன் என்று கூறினார். அதற்கு நான் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவன் என்றும், எனக்கு அனைத்து ஆவணங்களும் சரியாகதானே உள்ளது என்றும் கூறியதற்கு கண்டிப்பாக ரூ.10,000/-த்தை நாளை 05.11.2024-ம்தேதி தன்னிடம் கொடுக்க வேண்டும் என்றும், கோப்பு தன்னிடம் தான் உள்ளது என்றும், பணம் கொடுத்தால் மட்டுமே தடையில்லா சான்றுக்கு ஏற்பாடு பண்ணி கொடுப்பேன் என்றும், கண்டிப்பாக கூறிவிட்டார். மேலும் நான் இது சம்மந்தமாக ரேஞ்சரை நேரில் பார்க்க வேண்டும் என்று கேட்டதற்கு அதற்கு அவசியமில்லை என்றும், நானே அனைத்து வேலைகளையும் முடித்து உங்களுக்கு சான்று கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என கூறி அனுப்பிவிட்டார். வீட்டில் வந்து யோசித்தபோது அரசு சம்பளம் பெறும் அரசு ஊழியரான இவர் அனைத்து ஆவணங்களும் முறையாக வைத்துள்ள என்னிடம் லஞ்சம் கேட்கிறாரே என்று மனதளவில் மிகவும் வருத்தம் அடைந்தேன். எனவே, எனக்கு லஞ்சம் கொடுத்து தடையில்லா சான்று பெற விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட திரு.பால்ராஜ், வாட்ச்சர், வனசரக அலுவலகம், வடசேரி, நாகர்கோவில் என்பவர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க ஒரு புகார் மனுவை எழுதி புகார் மனுவுடன் மேற்படி வாட்ச்சர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-த்துடன் நேரில் வந்து இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள sd/- 05/11/2024 C.மகராஜபிள்ளை வடக்குதாமரைகுளம் 05/11/2024 Sir, Received the complaint on (05.11.2024) at 08.00 hrs and registered a case in Kanyakumari V&AC Cr.No.8/2024 U/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 09.00 hrs sd-05.11.2024 (C.SIVASANKARI)Inspector of Police, V&AC, Kanniyakumari Detachment.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

05/11/2024

(C.SIVASANKARI)
Inspector of Police,
V&AC, Kanniyakumari Detach